# True Disciple
# உண்மை சீஷன்

November - December 2018 நவம்பர் - டிசம்பர்

A Bi-Monthly News Bulletin of City Revival AG Church



## தேவனால்
## எல்லாம் கூடும்

## All things are possible with GOD

# கர்த்தரால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை

பாஸ்டர். **ஜெரி டேனியல்**

"கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?" ஆதி .18:1

"உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை" ஏரே.32:17

இயேசு கிறிஸ்து இன்றும் ஜீவிக்கிறார், அற்புதங்களை செய்கிறார். அவரால் செய்யக்கூடாத காரியம் ஒன்றுமில்லை (லூக்கா 1: 37). இன்று அநேகர் கிதியோனைப் போல, "கர்த்தர் எங்களோடிருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதகளெல்லாம் எங்கே?" என்று கேட்கிறார்கள் (நியாயா.6:13). தேவ ஜனமே, நம் தேவனுடைய அற்புதம் செய்யும் வல்லமை இன்றும் மாறிபோகவில்லை (எபி.13:8; மல். 3:6). அவரை விசுவாசித்தால் உங்கள் வாழ்வில் நிச்சயம் அற்புதம் செய்வார்.

## 1. தேவனால் தீர்க்க முடியாத பிரச்சனை ஒன்றுமில்லை
**(There is no PROBLEM too hard for God to solve)**

ஒவ்வொருவரும் வாழ்வில் கடினமான மற்றும் நெருக்கமான சூழ்நிலைகளுக்குள் கடந்து செல்லுகிறோம். ஆனால் தேவன் நம்மோடிருந்தால் எந்த சூழ்நிலையையும் மேற்கொள்ள முடியும். பலத்தினாலும் அல்ல, பராக்கிராமத்திலும் அல்ல, தேவனுடைய ஆவியினாலேயே ஆகும். பெரிய பர்வதமே! நீ எம்மாத்திரம்?... நீ செருபாபேலுக்கு (தேவபிள்ளைக்கு) முன்பு சமபூமியாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் (சகரி.4:6,7). நீங்கள் இன்று சந்திக்கும் "பர்வதம்" போன்ற பிரச்சனை என்ன? வியாதியா? பொருளாதார நெருக்கடியா? வேலையில், குடும்பத்தில், திருமணத்தில் பிரச்சனையா? நாளைய தினத்தை எப்படி சந்திப்பது என்று கவலையா? அப்படியால் இதை அறிந்து கொள்ளுங்கள் "தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை" (லூக்கா 1:37). வழியே இல்லாத இடத்தில் அவர் உங்களுக்காக வழியைத் திறப்பார் (ஏசாயா 43:19). கோணலானவைளைச் செவ்வையாக்குவார் (ஏசாயா 45:2). திடன் கொள்ளுங்கள்! கர்த்தரை நம்புங்கள். அவர் அற்புதம் செய்வார்.

## 2. தேவனால் நிறைவேற்ற முடியாத வாக்குத்தத்தம் ஒன்றுமில்லை
**(There is no PROMISE too hard for God to fulfil)**

நம்முடைய தேவன் தமது வார்த்தையை நிறைவேற்ற வல்லவர் (யோசுவா. 23 : 14; 1 சாமு. 3 : 19; 2 நாளா 6:10, 15; நெகே. 9:8). தேவன் பொய் சொல்ல ஒரு மனிதன் அல்ல, அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனத்தும் நிறைவேற்றாதிருப்பாரா என்று

வேதம் கூறுகிறது (எண்ணா.23:19). கர்த்தர் ஆபிரகாமுக்கும், சாராளுக்கும் வயது சென்ற நிலையிலும், சரீரம் செத்துப்போயிருந்த நிலையிலும், பிள்ளையில்லாத அவர்களுக்கு ஒரு பிள்ளையைத் தருவேன் என்று வாக்குப்பண்ணினார் (எபி.11:12). அவர் சொன்னபடியே நிறைவேற்றினார் (ஆதி. 21:1). ஈசாக்கின் பிறப்பு, கர்த்தர் தம்முடைய வார்த்தையை நிறைவேற்ற உண்மையும், வல்லமையும் உள்ளவராயிருக்கிறார் என்பதற்கு சான்றாகும். இஸ்ரவேலர்கள் கர்த்தர் தங்களுக்கு வாக்குப் பண்ணினபடியே கானான் தேசத்தை சுதந்திரித்துக் கொண்டனர் (யாத்.3:8; 6:6-8). யோசுவா ஜனங்களை நோக்கி, "கர்த்தர் உங்களுக்குச் சொன்ன நல்வார்த்தைகளிளெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை; அவைகளெல்லாம் உங்களுக்கு நிறைவேறிற்று" என்று கூறினான் (யோசுவா 23: 14; 21 : 45). ஆம் கர்த்தர் தம்முடைய வாக்கை உங்கள் வாழ்வில் நிச்சயம் நிறைவேற்றுவார். தாமதித்தாலும் நிச்சயம் நிறைவேறும் (ஆபகூக் 2:3).

### 3. தேவனால் பதிலளிக்க முடியாத ஜெபம் ஒன்றுமில்லை

**(There is no PRAYER too hard for God to answer)**

நாம் சேவிக்கிற தேவன் ஜெபத்திற்கு பதிலளிக்கிறவர் (யோவான் 14:14). என்னை நோக்கி கூப்பிடு. அப்பொழுது நான் உனக்கு மறுஉத்தரவு கொடுத்து, நீ அறியாததும் எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்" என்று கர்த்தர் சொல்கிறார் (எரே.33:3). தேவ மனிதர்கள் ஜெபித்த போது கர்த்தர் ஆச்சரியமான காரியங்களைச் செய்திருக்கிறார். ஆபிரகாம் தேவனை நோக்கி ஜெபித்தபொழுது தேவன் அபிமெலெக்கையும் அவன் மனைவியையும் குணமாக்கி, பிள்ளை பெறும்படி அநுக்கிரகம் பண்ணினார் (ஆதி.20 : 17). யோசுவா ஜெபித்தபோது, சூரியனை தரித்து நிற்க செய்தார் (யோசுவா. 10 :12). எலியா ஜெபித்த போது வானத்திலிருந்து அக்கினி இறங்கிற்று (1 இராஜா. 18:36-38). பேதுரு ஜெபித்தபோது, மரித்த பெண் உயிரோடு எழும்பினாள் (அப் . 9: 40). தேவனால் பதிலளிக்க முடியாத ஜெபம் என்று ஒன்றும் இல்லை. நாம் அவருடைய சித்தத்தின்படி சுத்த இருதயத்தோடு வேண்டிக்கொள்ளும்போது அவர் நிச்சயம் நமக்கு பதிலளிப்பார் (1 யோவான் 3:21, 22 ; 5: 14). நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது (யாக்.5:16). ஜெபியுங்கள்! அற்புதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்!

### 4. தேவனால் இரட்சிக்கமுடியாத நபர் ஒருவருமில்லை

**(There is no PERSON too hard for God to save)**

இரட்சிக்ககூடாதபடி கர்த்தருடைய கரம் குறுகிப்போகவில்லை என்று வேதம் சொல்லுகிறது (ஏசா. 59:1, 50 : 2; எண். 11:23). இரட்சிக்க முடியாத நபர் என்று அவருடைய பார்வையில் ஒருவரும் இல்லை.

ஒவ்வொரு நாளும் இயேசு ஆயிரக்கணக்கான நபர்களை இரட்சித்து, தம்முடைய மந்தைக்குள் சேர்த்து வருகிறார். குடிகாரர்கள், கொள்ளைக்காரர்கள், கொலைகாரர்கள், விபச்சாரக்காரர்கள் என பலரும் இயேசுவின் வல்லமையுள்ள இரத்ததினால் கழுவப்பட்டு, இரட்சிக்கப்பட்டு வருகின்றனர். நீங்கள் யாரோ சிலருடைய இரட்சிப்பிற்காக ஜெபித்து வரலாம். ஒருவேளை அவர்கள் இன்னும் மனந்திரும்பாமல் இருக்கலாம். தொடர்ந்து ஜெபியுங்கள். கர்த்தர் நிச்சயம் அவர்களை இரட்சிப்பார். சகேயு, பவுல், லீதியாள் போன்றவர்களை இரட்சித்த தேவன் உங்கள் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் நீங்கள் ஜெபிக்கும் நபர்களையும் அவர் இரட்சிக்க வல்லமையுள்ளவர் (லூக்கா.19:9; அப்.9:1-6, 16:14,15).

### 5. தேவனால் எழுப்புதல் கொண்டு வரமுடியாத இடம் ஒன்றுமில்லை.

**(There is no PLACE too hard for God to bring revival)**

எசேக்கியல் தீர்க்கதரிசி, எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கை தன்னுடைய தரிசனத்தில் கண்டார் (எசே.37:1 -10). அந்த இடம் மிகவும் நம்பிக்கையற்றதாகவும், உயிரற்றதாகவும் இருந்தது. ஜனங்களும் 'எங்கள் நம்பிக்கை அற்று போயிற்று' என்றார்கள் (வச.11). ஆனால் தேவன் நம்பிக்கையற்ற இடத்தில் நம்பிக்கை தருகிறவர். உலர்ந்த எலும்புகளை உயிரடைய செய்கிறவர். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. நம்முடைய திருச்சி பட்டணத்திலும், தேசத்திலும் தேவன் மகிமையான எழுப்புதலை கொண்டு வருவார். நாம் தொடர்ந்து ஜெபித்து சுவிசேஷ பணியை செய்வோம். நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று வாக்குபண்ணியிருக்கிறார் (அப்.2:17). அவர் அவாந்திர வெளியை தண்ணீர் தடாகமாகவும், வறண்ட நிலத்தை நீரூற்றதாகவும் மாற்ற வல்லவர் (சங்.107:35). கர்த்தரால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை! ஆமென்!

---


## விடுதலை உபவாச ஜெபம்

**ஒவ்வொரு 2வது சனிக்கிழமை**

**காலை 10.00 மணி முதல் 1.30 மணி வரை**

**நவம்பர் 10**



**டிசம்பர் 8**

இடம் : **சிட்டி ரிவைவல் ஏ.ஜி.சர்ச்,** ஜென்னி பிளாசா

*பாவம், சாபம், வியாதி, கடன், பில்லிசூனியம் ஆகிய கட்டுகளிலிருக்கிறவர்களை அழைத்து வாருங்கள். இயேசு அற்புதம் செய்வார்! இயேசு விடுதலை தருவார்!*

# அர்த்தமுள்ள கிறிஸ்துமஸ் கொண்டாடுவோம்



2018 ஆண்டுகளுக்கு முன்பு கடவுள் மனிதனாக பிறந்த ஒரு மாபெரும் தியாகத்தின் நிகழ்வுதான் கிறிஸ்துமஸ். அந்த நாள் தேவன் மனிதனுக்கு மிகப்பெரிய ஈவாகிய அவருடைய ஒரே பேரான குமாரனை கொடுத்த நாள். வேதத்தில் மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷங்களின் முதல் இரண்டு அதிகாரங்களை வாசிக்கும்போது முதல் கிறிஸ்துமஸ் எப்படி கொண்டாடப்பட்டது என்று அறிந்துகொள்ளலாம். கிறிஸ்துமஸ்ஸை அர்த்தமுள்ளதாய் கொண்டாடுவது எப்படி என்று இந்த அதிகாரங்கள் மூலம் உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

**1. தேவனைப் போற்றி துதியுங்கள்** (ADORE the Lord)

முதல் கிறிஸ்துமஸ் இராஜாதி இராஜாவை உண்மையாய் ஆராதிப்பதை முக்கியப்படுத்துகிறது. இயேசு கிறிஸ்துவின் பிறப்பு பரலோகத்தையும், பூலோகத்தையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. தேவதூதர்களின் சேனை தேவனுக்கு மகிமை என்று ஆர்ப்பரித்தனர் (லூக்கா 2:13). சாஸ்திரிகள் மிகுந்த சந்தோஷத்தால் நிரம்பினார்கள் (மத்தேயு 2:10). பாலன் இயேசுவை அவர்கள் போற்றி, ஆராதித்து, பொன்னும், தூபவர்க்கமும், வெள்ளைபோளமும் பரிசாகக் கொடுத்தனர் (2:11). வில்லியம் பார்கிலே என்ற தேவ மனிதர், ‘சாஸ்திரிகள் கொண்டுவந்த ஒவ்வொரு பரிசும் இயேசுவின் பண்போடும், ஊழியத்தோடும் சம்மந்தப்பட்டது’ என்று எழுதுகிறார். பொன் ஒரு இராஜாவுக்கு பரிசாகத்தரப்படும். இயேசு இராஜாவாகவே பிறந்தார். தூபவர்க்கம் ஒரு ஆசாரியனுக்கு வார்க்கப்படும். இயேசுவும் ஆசாரியராக தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே பாலமாக செயல்பட்டார். வெள்ளை போளம் இறந்துபோனவர்களுக்கு பூசப்படும். இயேசுவும் மனுகுலத்தின் மீட்பிற்காக மரிக்க வந்தார் (யோவான் 1:29). இந்த கிறிஸ்துமஸ் நாட்கள் தேவனுக்கு நன்றி சொல்லுகிற நாட்களாக, அவருடைய குமாரனாகிய இயேசுவை புகழ்ந்து ஆராதிக்கிற நாட்களாக மாறட்டும். தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக நாம் அவரைத் துதிக்க வேண்டும் (2 கொரி. 9:15). நம்முடைய ஆத்துமா அவரை மகிமைப்படுத்தி, நம்முடைய ஆவி இரட்சகராகிய தேவனில் களிகூறட்டும் (லூக்கா 1:46-47).

**2. உங்கள் பாவ வாழ்க்கையை விட்டு மனந்திரும்புங்கள்** (ABANDON your sins)

புத்தாடை, கேக், கேரல்ஸ் மற்றும் வாழ்த்துமடல்களில் இயேசு சந்தோஷப்படமாட்டார். நாம் அவருக்கு பிரியமான வாழ்க்கையை வாழ வேண்டும். அப்போது தான் அவர் சந்தோஷப்படுவார். இரட்சிப்புதான் நமக்கு உண்மையான மகிழ்ச்சியைத் தரும் (சங்கீதம். 51:12). இயேசு என்ற பெயருக்கு இரட்சகர் என்று அர்த்தம் (மத்தேயு 1:2). இயேசு இந்த உலகத்திற்கு ஜனங்களின் பாவங்களை போக்கவே வந்தார் (1 தீமோ. 1:15). மனந்திரும்புங்கள் பரலோக இராஜ்ஜியம் சமீபமாயிருக்கிறது என்ற செய்தியை இயேசு கொண்டுவந்தார் (மாற்கு 1:15). நாம் நம் பாவங்களுக்காக மனந்திரும்பி நம் இதயத்தில் அவருக்கு இடம் தந்தால் அவர் நம்மேல் பிரியப்படுவார்.

இயேசு பிறந்தபோது சத்திரத்திலே அவருக்கு இடம் இல்லை (லூக்கா 2:7). இன்று கிறிஸ்துமஸ் கொண்டாடுகிற அநேக மக்களுடைய வாழ்க்கையில் இயேசுவுக்கு இடமில்லை. அநேக நேரங்களில் நாம் பாவமான, தீமையான காரியங்களில் ஈடுபட்டு இயேசுவுக்கு கதவடைத்து வருகிறோம். வருட இறுதியில் வந்திருக்கும் நாம், இயேசு நம் வாழ்வின் மையத்தில் இருக்கிறாரோ என்று சோதித்துப் பார்ப்போம். ஒருவேளை மற்றக் காரியங்களுக்கு முக்கியத்துவம் தந்து இயேசுவை வெளியேற்றியிருந்தால் அவரை திரும்பவும் அழைப்போம். பாவத்தை விட்டு விலக தீர்மானம் எடுப்போம். இதோ வாசற்படியிலிருந்து கதவை தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தை கேட்டு கதவை திறந்தால் உள்ளே பிரவேசிப்பேன் என்று இயேசு கூறுகிறார் (வெளி 3:20).

**3. சமாதானம் பண்ணுகிறவர்களாய் செயல்படுங்கள், சமாதானமாய் வாழுங்கள்** (ASPIRE to live in peace)

கிறிஸ்துமஸ்ஸின் போது நாம் சமாதானப் பிரபுவின் பிறந்தநாளை கொண்டாடுகிறோம் (ஏசாயா. 9:6, மீகா 5:5). தேவதூதர்கள் பூமியிலே மனிதர்களுக்கு சமாதானம் என்று பாடினார்கள் (லூக்கா 2:14). கிறிஸ்துமஸ் செய்தியே ஒப்புரவாகுதலின் செய்திதான். நாம் நம் செய்கையால், நாவால் மற்றவரை கடந்த நாட்களில் காயப்படுத்தியிருக்கலாம். இந்த நாட்களில் ஒப்புரவாவோம்.

நாம் பேசாதிருக்கிற நம் நண்பர்கள், உறவினரை அழைப்போம். வாழ்த்துக்களை அவர்களுக்கு அனுப்பி உறவை சரிசெய்வோம். தேவகுமாரனே கீழே இறங்கி மனுஷ குமாரனானாரே (பிலி. 2:5-8)! வீண் பெருமையை அகற்றுவோம். பூமியிலே நம்முடைய நாட்கள் சொற்பம். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால் உங்கள் பரமபிதாவும் உங்களுக்கு மன்னிப்பார் (மத்தேயு 6:14,15). ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு வேண்டாம் (கொலோ. 3:13; எபே. 4:31).

கூடுமானால் யாவரோடும் சமாதானமாயிருங்கள் என்று வேதம் சொல்லுகிறது (ரோமர் 12:18; எபி. 12:14). இயேசுவும் நாம் சமாதானமாயிருக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார் (மத்தேயு 5:9). இந்த நாட்களில் மக்களிடையே சமாதானமாயிருக்க எல்லா முயற்சியும் எடுப்போம். கிறிஸ்தவர்கள் வீட்டிலும், சமுதாயத்திலும், சபையிலும், வேலை ஸ்தலங்களிலும் சமாதானம் பண்ணுகிறவர்களாய் இருக்க வேண்டும். ஆகவே ஒப்புரவாக்குதலின் மூலம் சிதைந்துபோன நம் உறவுகளை இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் சரி செய்வோம்.

**4. ஏழைகளை நினைத்துக் கொள்ளுங்கள்**
(ATTEND to the need of the poor)

ஏழைகளையும் தேவையுள்ளோரையும் நிராகரித்து கொண்டாடும் கிறிஸ்துமஸ் தேவனுக்கு முன்பாக அர்த்தமற்றதாகிவிடும். இயேசு நமது பிறப்பிற்காக ஒரு ஏழை குடும்பத்தை தெரிந்தெடுத்தார். அவர் பெற்றோர் ஒரு நல்ல ஆட்டுக்குட்டியை விலைகொடுத்து வாங்க முடியாமல் ஒரு ஜோடி புறாக்களை காணிக்கையாக படைத்தார்கள் (லூக்கா 2:24, லேவி 12:8). ஏழைகளோடு இயேசு தம்மை ஒன்றுபடுத்திக்கொண்டார். தரித்திரருக்கு

சுவிசேஷம் அறிவிக்க இயேசு வந்தார் (லூக்கா 4:18). நாமும் தரித்திரரை நினைத்துக்கொள்ள வேண்டும் (கலா. 2:10). இந்த துயர் நிறைந்த உலகில் மனிதர்கள் வேதனை, பயம், குழப்பம் நிறைந்தோராய் இருக்கின்றனர். இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் சுயநலத்தைகளைந்து மற்றவர்களுக்கு உதவி செய்வோம்.

கிறிஸ்துமஸ் சம்பவத்தின் சுருக்கமே கொடுத்தலைப்பற்றிதான் (யோவான் 3:16). நம்முடைய சம்பத்தை குறையுள்ளவர்களுக்கு பகிர்ந்தளிப்போம். நீங்கள் விருந்து செய்யும்போது தரித்திரரையும், முடவர்களையும், சப்பாணிகளையும், குருடர்களையும் அழைத்து உபசரியுங்கள். அப்பொழுது நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள் என்று இயேசு சொன்னார். நீதிமான்கள் உயிர்த்தெழுதலில் அதன் பலனை பெறுவீர்கள் (லூக்கா 14:12-14). தரித்திரரை ஆதரிப்போருக்கு ஆசீர்வாதம் நிச்சயம் என்று வேதம் கூறுகிறது (சங். 41:1-3, 112:9).

**5. இரட்சிப்பின் நற்செய்தியை அறிவியுங்கள்**
(ANNOUNCE the good news)

கிறிஸ்துமஸ்-யின் போது தேவதூதன் வந்து, ‘இதோ எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்குக் கொண்டுவருகிறோம்’ என்றனர் (லூக்கா 2:10). பெத்லகேமிலே இரட்சகர் பிறந்திருக்கிறார் என்ற மகத்துவமான இரட்சிப்பின் நற்செய்தி அது (2:11). மேலும் அது நம்பிக்கையின் செய்தியாக சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட மேய்ப்பர்களுக்கு சொல்லப்பட்டது. சகரியாவுக்கும், மரியாளுக்கும் கூட இந்த நற்செய்தி அறிவிக்கப்பட்டது.

இந்த இரட்சிப்பின் நற்செய்தியை மேய்ப்பவர்கள் பிரசித்தம் பண்ணினார்கள் என்று வேதம் கூறுகிறது (லூக்கா 2:17). இன்று நாம் இயேசுவின் இரண்டாம் வருகையை பற்றி பேசுகிறோம். ஆனால் இன்று அநேகருக்கு அவரின் முதல் வருகையே தெரியவில்லை. இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் அவரின் அன்பை, அண்டை வீட்டார், அறிமுகமானோர், அயலகத்தாருக்கு பகிர்ந்துகொள்ளுங்கள். இயேசுவை அறிய ஆவலாய் இருப்போரை சபைக்கு அழைத்து வாருங்கள். சுவிசேஷம் சொல்கிற காலமாக இந்த கிறிஸ்துமஸ் காலம் அமையட்டும்! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

## கிறிஸ்துமஸ் ஆராதனைகள்

**டிசம்பர் 24**
**திங்கட்கிழமை**
**இரவு 10.30 மணி முதல்**
**1.00 மணி வரை**
**(தமிழ்)**

**டிசம்பர் 25**
**செவ்வாய்கிழமை**
**காலை 07.00 மணி முதல்**
**09.30 மணி வரை**
**(English-தமிழ்)**

# உபவாச ஜெபம் - FASTING PRAYER

உபவாசம் என்பது ஆவிக்குரிய நோக்கத்திற்காக உணவு அருந்தாமல் சரீரத்தைக் கீழ்ப்படுத்தி, தேவனைத் தேடுவதாகும். உபவாசம் என்பது நம்முடைய வாழ்க்கையில் ஆவிக்குரிய பயிற்சியாகவும் ஒரு பழக்கமாகவும் இருக்க வேண்டும். என்று இயேசு விரும்புகிறார். இயேசு, **நீ உபவாசம் பண்ணினால்'** என்று கூறாமல் '**நீயோ உபவாசம் பண்ணும் போது .....** (மத். 6 : 16) என்று கூறினார். ஆகவே உபவாசம் நம்முடைய வாழ்க்கையில் ஒரு ஆவிக்குரிய பழக்கமாக இருக்க வேண்டும்.

**உபவாசத்தில் மூன்று விதங்கள் உண்டு.**

**முதலாவது,** சாதாரண உபவாசம் (Normal fast). இது தண்ணீர் மாத்திரம் குடித்துவிட்டு மற்ற எந்த உணவுப் பொருளையும் உண்ணாமல் இருக்கும் உபவாசம். (மத். 4 :2). **இரண்டாவதாக,** முழுமையான தீவிர உபவாசம் (Absolute Fast). இது தண்ணீர் குடிக்காமலும் சாப்பிடாமலும் இருக்கும் உபவாசம். அதிகபட்சமாக 3 நாட்கள் மட்டும் இந்த உபவாசம் இருக்கலாம். இல்லாவிடில் சரீரம் பாதிக்கப்படும் (எஸ்தர் 4 : 16, அப்.9:9). **மூன்றாவதாக** ஒரு பகுதியான உபவாசம் (Partial Fast). இது உணவை முற்றிலும் தவிர்த்து விடாமல் உணவைக் குறைத்தோ, ருசிகரமான பதார்த்தங்கள், இறைச்சி ஆகியவற்றைத் தவிர்த்தோ இருக்கும் உபவாசம் (தானியேல் 10 :3)

**இயேசுவும் உபவாசமும்**

இயேசு இந்த பூமியில் இருக்கும் போது உபவாசித்தார். தமது ஊழியத்தின் ஆரம்பத்தில் 40 நாட்கள் உபவாசித்து ஜெபித்தார். (மத் 4:2) அவர் உபவாசத்தை தன் வாழ்க்கையில் பழக்கமாக வைத்திருந்தார் என மாற்கு 9 : 29 வசனத்தின் மூலம் அறியலாம். இயேசு தம்முடைய சீஷர்கள் உபவாசிப்பார்கள் எனக் கூறினார். (மத் 9 : 15), புதிய ஏற்பாட்டு சபை விசுவாசிகளும் சீஷர்களும் இயேசுவின் மாதிரியைப் பின்பற்றி உபவாசித்தார்கள் (அப். 13:2,3, 14:23, 27:33, 2 கொரி. 6;5, 11:27).

**உபவாச ஜெபத்தின் நோக்கங்கள் :**

தேவ ஜனங்கள் வேதத்தில் பல காரியங்களுக்காக உபவாசித்து ஜெபித்தார்கள். அவைகளில் சில :

1. தேவனுடைய கிருபையை அதிகமாகப் பெறவும். தேவனுடைய பிரசன்னத்தை நெருக்கமாக உணரவும் நம்முடைய ஆத்துமாவை தேவனுக்கு முன்பாகத் தாழ்த்துவதற்காகவும் (எஸ்தர் 8 : 21. சங் .69:10; ஏசாயா 57:15)
2. தனிப்பட்ட வாழ்வில் செய்த பாவத்திற்காவும், தோல்விக்காகவும் தேவனிடத்தில் மன்னிப்புக் கேட்டு இரக்கத்தைப்பெற (1சாமு 7: 6, நெகே. 9:1,2)
3. சபைக்காக தேசத்திற்காக உலகத்திற்காகப் பரிந்து பேசி ஜெபிக்க (1 சாமு 7 : 6, நெகே. 9 : 12)
4. செய்யப்போகிற புதிய வேலைக்காகவும், ஊழியத்திற்காகவும் தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்ள (மத் 4:2)
5. சத்துருவின் பிடியிலிருந்து ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட (ஏசாயா 58:6, மத். 17:14-21, லூக்கா 4:18)
6. தேவனுடைய சித்தத்தைக் குறித்ததான வெளிப்பாடுகளையும் ஞானத்தையும் பெற (தானி. 9:3, 21, 22, அப். 13:2,3)
7. சத்துருவின் கிரியைகள், திட்டங்கள் அழிக்கப்படுவதற்காக (எஸ்தர் 4:16)

# நன்றி செலுத்துதல் - Thanksgiving

## நன்றி செலுத்துதல் பற்றி வேதாகமம் வெளிப்படுத்தும் சில உண்மைகள்

1. **நன்றி செலுத்துதல் என்பது தேவனின் கட்டளைக்குக் கீழ்ப்படியும் ஒரு செயலாகும்:** நன்றி செலுத்துதல் ஏதோ நாம் செய்யும் இனிமையான காரியம் அல்ல. அது நாம் கீழ்ப்படிய வேண்டிய கட்டளையாகும். "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள். அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1தெச.5:18).

2. **நன்றி செலுத்துவதை விட்டுவிடுதல் நம்மை விக்கிரக ஆராதனைக்கு வழிநடத்துவதாகும் :** "அவர்கள் தேவனை அறிந்தும் அவரை தேவனென்று மகிமைப் படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து..... அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள் ..... ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்" (ரோமர் 1: 21-25). நம் இதயம் ஒவ்வொரு நாளும் நன்றியும் துதியும் நிறைந்ததாய் இருக்கிறதா? அப்படி இல்லாவிடில் நம் இதயம் நம்மை விக்கிரக ஆராதனைக்குத் தயார் செய்து கொண்டுள்ளது.

3. **நன்றி கூறுதல் இல்லாத ஜெபம் குறைபாடுள்ளதாகும் :** ஜெபம் என்பது விண்ணப்பம் செய்வது மட்டுமல்ல. மாறாக விண்ணப்பித்தலும் நன்றி செலுத்துதலுமாகும். அப்.பவுல், "எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (1 திமோ. 2:1 ; பிலி. 4 : 6) என்று வலியுறுத்துகிறார். வல்லமையான ஜெபம் என்பது நாம் சிலவற்றைக் கேட்பது மட்டுமல்ல, மாறாக விண்ணப்பிப்பதும், நன்றி செலுத்துதலுமாகும். நன்றி செலுத்துதல் இல்லாத ஜெபம் ஒரு கால் குறைவாக உள்ள நாற்காலிக்குச் சமம். அல்லது முள் இல்லாத கடிகாரத்திற்கு ஒப்பாகும்.

4. **நன்றி செலுத்துதல் நாம் வாழ்நாள் முழுவதும் செய்யவேண்டிய ஒன்றாகும் :** நன்றி செலுத்துதல் விசேஷமான சில காரியங்களுக்குரியது மட்டும் அன்று. "எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்" என்று வேதம் கூறுகிறது (எபே.5:20; கொலோ 3:15-17). விசேஷமான ஆசீர்வாதங்களுக்காக நாம் காத்திருக்கக் கூடாது, இப்பொழுது நீங்கள் சுவாசிக்கும் காற்றே ஆசீர்வாதமாகும். அதை தேவனுக்கு நன்றிகூற பயன்படுத்துங்கள்.

5. **நன்றி செலுத்துதல் நாம் தீமையானவற்றை பேசுவதை தடை செய்கிறது :** நன்றியுள்ள வாழ்க்கை வாழ்வது புறங்கூறும், முறுமுறுக்கும் நாவை வெற்றிக்கொள்வதன் இரகசியமாகும். "அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ் செய்தலே தகும்'' (எபே. 5:4). நம் உதடுகள் நன்றி கூறும் பழக்கமுடையதாயிருந்தால் அது தீமையானவற்றை பேசுவதை நிறுத்தி விடும்.

6. **நன்றி செலுத்துதல் கர்த்தருக்கு மட்டுமல்ல :** நாம் தேவனுக்கு மட்டுமல்லாது பிறருக்கும் நன்றி கூற வேண்டும். அப்.பவுல் பிரிசில்லா, அக்கில்லாவுக்கு நன்றி கூறும்போது அது தேவனுக்கு நன்றி செலுத்தியதற்கு ஒப்பாகும். தகுதியுள்ளவர்களுக்கு நாம் நன்றி செலுத்தும் போது அது கர்த்தரை மகிழ்விப்பதோடு அவருக்கு நன்றி கூறும் ஜெபமுமாகும். (ரோமர் 16:3,4).

7. **நன்றியோடிருத்தல் நம் வாழ்வில் வரும் பல பிரச்சனைகளைத் தடை செய்கிறது :** ஒரு உண்மை என்னவெனில் நன்றிசெலுத்த தவறும்போது வாழ்வில் பிரச்சனைகள் உருவாகுகிறது. ஆனால் நன்றி செலுத்துவது வாழ்வில் பல பிரச்சனைகள் ஏற்படாமல் தடுக்கிறது. நாம் தேவன் தரும் சமாதானத்தை விரும்பினால் நாம் எப்போதும் சந்தோஷமாய் இருக்க வேண்டும். அதற்கு எளிய உதவி நாம் நன்றியறிதலோடு ஜெபித்து வாழ்வதாகும் என்று வேதம் கூறுகிறது (பிலி. 4 : 6-7).

8. **நன்றி செலுத்துதல் நாம் தேவனுக்கு அளிக்கும் பரிசாகும்** (Gift) : நன்றி செலுத்துதல் தேவனுக்கு நாம் அளிக்கும் பரிசாகும். நாம் அதை தேவனுக்கு 'நன்றி செலுத்துதல்' (Thanks Giving) என்று கூறுகிறோம். "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்" (எபி 13 : 15 - 16).

*மொழியாக்கம் : சகோ.இம்மானுவேல்*

டிசம்பர்
7, 8, 9
வெள்ளி, சனி, ஞாயிறு
மாலை 6.00 மணி

# நற்செய்திப் பெருவிழா

இடம்

## சிட்டி ரிவைவல் ஏ.ஜி.சர்ச்

ஜென்னி பிளாசா,
கண்டோன்மென்ட், திருச்சி – 1

**தேவ செய்தி**

## சுவி. பாபு K.மேத்யூ

(கேரளா)



இயேசு கிறிஸ்து அருளும்
விடுதலை, சுகம் , சமாதானம், ஆசீர்வாதம் பெற
உங்களை அன்புடன் அழைக்கின்றோம்!

*நண்பர்கள், உறவினர்களை அழைத்து வாருங்கள்!*

---

*தசமபாகம், காணிக்கைகள் & நன்கொடைகளை*
*கீழ்கண்ட வங்கி கணக்கில் செலுத்தலாம்.*

## Your Offerings and Donations Can Be Sent to

A/c Name : City Revival AG Church
A/c Number : 35354599169
Bank Name : STATE BANK OF INDIA
IFSC Code : SBIN0000930
Branch Code : 00930
Address : Tiruchirappalli Main Branch,
7, MacDonalds Road,
Cantonment, Trichy - 1

A/c Name : City Revival AG Church
A/c Number : 1196172000007824
Bank Name : KARUR VYSYA BANK
IFSC Code : KVBL0001196
Branch Code : 001196
Address : 5, Bharathiar Salai,
Jenne Plaza,
Cantonment, Trichy -1

Kindly intimate us through email or sms immediately after you have sent your offering through bank transfer so that we can confirm the receipt of your offering.

சபை கட்டிட நிதிக்காக கொடுக்க விரும்புகிறவர்கள் மேலே கொடுக்கப்பட்டுள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கிக்கணக்கில் செலுத்தும்படி கேட்டுக்கொள்கிறோம்.

# NOTHING IS TOO HARD FOR THE LORD

***Rev. Dr. Jerry Daniel***

*"Is anything too hard for the Lord?" (Gen. 18:14)*
*"There is nothing too hard for you." (Jer.32:17)*

**JESUS CHRIST** is still alive and performing miracles even today. There is nothing too hard for him to do. Many today are despondent like Gideon and ask the question, `If God is with us, why all this has happened to us? Where are all His miracles that our fathers told us about? I am writing this to encourage you that our Lord's power to work miracles has not changed (Heb. 13:8; Mal. 3:6) and he is willing to do amazing things in your life if only you believe in Him.

**1. There is no PROBLEM too hard for God to solve.**

Everyone gets into tough and tight situations in life. But with God we can overcome and surmount all the problems. The Lord says, 'Not by might not by power, but by my Spirit'. 'What are you, O mighty mountain? You will become level ground' (Zech.4:6,7). What "mountains" do you face today? What are the things that seem to be impossible for you today? Is it sickness? Is it financial predicament? Is it problems at work? Is it a grief that you just can't bear any longer? Is your marriage or family falling apart? Do you struggle with anxiety so great you don't think you can make it through another day? Well, then hear this! NOTHING is impossible with God (Luke 1:37). He can make a way when there is no way (Is. 43:19). As He told Jeremiah, "I am the Lord, the God of all mankind. Is anything too hard for me?" (Jer.32:27). No mountain is too big for him to level (Is. 45:2 NIV). No sea is too great for him to part (Exo.14:21; Ps. 66:6). No problem is too difficult for Him to solve! Cheer up! Trust in Him. He will do a miracle for you!

**2. There is no PROMISE too hard for God to fulfil.**

Our God is a promise keeping God (Joshua 23:14; 1Sam.3:19; 2 Chro.6:10, 15; Neh.9:8). The Bible says, 'God is not a man, that He should lie….Does he promise and not fulfill? (Num. 23:19). God promised Abraham and Sarah that He would give them a child when they were barren and when their bodies were as good as dead (Rom. 4:19, Heb. 11:12). And the Lord fulfilled his promise exactly as he had said (Gen. 21:1). The birth of Isaac signals that God is faithful and mighty in His promise. When the Israelites inherited the Promised Land as the Lord promised (Exo.3:8; 6:6-8), Joshua said to the people, 'You know with all your heart and soul that not one of all the good promises the Lord your God gave you has failed. Every promise has been fulfilled; not one has failed' (Joshua 23:14). God has the power to do what he has promised to you (Romans 4:21). God's delays are not his denials (Hab. 2:3). He will surely fulfil his promises in your life.

**3. There is no PRAYER too hard for God to answer.**

We serve a God who answers and sometimes over-answers prayers (John 14:14). The Lord declares, 'Call to me and I will answer you and tell you great and unsearchable things you do not know' (Jer.33:3). God did great and incredible things when the men of God prayed. When Abraham prayed, God healed the barrenness of Abimelech's household (Gen.20:17). When Joshua prayed, the sun stood still (Jos. 10:12). When Elijah prayed, the fire fell from heaven (I Kings 18:36-38). When Peter prayed, dead woman came to life (Acts 9:40). We can never pray a prayer too difficult for Him to answer. There is no tear which prayer cannot wipe away or dry up. There is no despair which it cannot dispel. E.M. Bounds says, `God is pledged that if we ask, we shall receive. God can withhold nothing from faith and prayer.' When we go to God with pure and believing heart and ask anything according to His will, He has assured us His answers for all our prayers (I John 3:21,22; 5:14). The prayer of a righteous man is effective and powerful (James 5:16). Your miracle is just a prayer away!

**4. There is no PERSON too hard for God to save.**

The Bible says, "Surely the arm of the Lord is not too short to save". (Isaiah. 59:1; 50:2; Num.11:23). There is no person too hard for God to save. No one is incorrigible or irredeemable in the sight of God. Everyday God transforms the lives of hundreds of people all over the world. Addicts, dacoits, murderers, rebels, robbers and the debauched are all being transformed by the saving power of the blood of Jesus. He will do the same in the lives of your friends and family members if you continue to pray from them (Mark 10:26, 27). You may be praying for someone who has not come to repentance yet. Continue to pray. God who changed the life of Zacchaeus, Paul, Lydia will change their lives also (Luke 10:9: Acts 9:1-6; 16:14, 15).

**5. There is no PLACE too hard for God to send a revival**

The prophet Ezekiel was given a vision of a valley of dry bones (Eze. 37:1-10). The condition of the place is awful and hopeless. The people themselves cried out and said,' our hope is lost!' (v.11). But with God nothing is hopeless. God made the dry bone live. What God expects is that we must obey like the prophet and keep prophesying. Our city of Trichy and our nation can experience a mighty revival when we keep praying and evangelizing. He has promised that He would pour out His Spirit upon all people (Acts 2:17). God can bring revival in any seemingly hard and dry places. He can turn the desert into pools of water and the parched ground into flowing springs (Psalm 107:35). Nothing is impossible with God.

# MEANINGFUL CHRISTMAS



Christmas is the event of the greatest sacrifice –God became man. It is the day when god gave man the greatest gifts- his only begotten son. It is always worth remembering the first Christmas. We have two narratives of the first Christmas in the gospels- one in Matthew and the other in Luke. When we read these chapters, we will catch the spirit of Christmas. Now I would like to bring out certain lessons from these chapters and present to you how to celebrate Christmas meaningfully.

**1. ADORE THE LORD**

The first Christmas focused upon true worship of the king of kings. The birth of Christ Jesus made both heaven and earth rejoicing. The angelic hosts exclaimed, 'Glory to God* (Luke2.13). We should sing praises to God for his indescribable gift (II Cor. 9.15). The Magi were filled with great joy (Matt.2.10) and they adored and worshipped the baby Jesus by giving Him the gifts of gold, incense and myrrh (2:11). William Barclay writes that the Magi have seen in each gift something which specially matched some characteristic of Jesus and His work. Gold is the gift for a king. Jesus was born to be King. Frankincense is the gift for a priest. The priest is the man who builds a bridge between men and God. That is what Jesus did, He opened the way to God, He made; it possible for men to enter into the very presence of God. Myrrh is the gift of one who is to die, Jesus came to die for the salvation of the entire mankind (John 1:29). Let us also adore and worship the Lord Jesus by acknowledging who He is and what He has done for us. Let our souls magnify the Lord and our spirits rejoice in God our Saviour (Luke 1:46, 47)!

**2. ABANDON YOUR SINFUL LIFE.**

Jesus is not delighted in your new clothes, cakes, carols, cards and crackers. But he will be glad when you live a life which is pleasing to him. What gives us true joy during this season of Christmas is salvation (Ps 51:12). The name Jesus means 'Saviour' (Matt. 1:21; Luke 2:11). Jesus came to this world to deliver people from their sins (1 Tim 1:15). The message that Jesus brought was, 'Repent, for the kingdom of God is near' (Mark 1:15). Jesus will be pleased only when we repent of our sins and give him room in our hearts. Decide to abandon all evils habits, wicked practices and bad friendship. Jesus is standing at the door of your heart and knocking. If you hear his voice now and open the door of your heart, He will come in and bless you richly (Rev. 3:20).

**3. ASPIRE & ATTEMPT TO LIVE IN PEACE**

We celebrate the birth of the Prince of peace during Christmas (Isa 9:6; Micah 5:5). The angels sang, 'And on earth peace to men!' (Luke 2:14). The message of Christmas is a message of reconciliation. We have hurt so many people with the sword of our tongue and with our deeds. We can and should take advantage of this season for recon ciliation.We can invite our relatives and friends with whom we are not in speaking terms, whatever the reason. We can send them a greeting card to break the silence. When the Son of God

stooped down to become the Son of Man, why don't we humble ourselves? (Phil. 2: 5-8). We should not stand on false prestige. Our days on earth are short. An unforgiving spirit will deprive us of God's favor (Matt.6:14, 15). We should forgive all men and never hold any grudge against anyone (Col. 3:13; Eph 4:32). The Bible says, 'if it is possible, as much as depends on you, live peaceably will all men' (Rom 12:18; Heb 12:14). Jesus has also said that we should become peace-makers (Matt. 5:9). We must make every effort to make peace between people during this season.

**4. ATTEND TO THE NEEDS OF THE POOR.**

The Christmas celebration which keeps the poor and needy out is meaningless before God. Jesus chose a poor family for his birth. His parents could not afford a lamp so they offered a pair of doves as sacrifice (Luke 2:24; Lev. 12:8). Jesus identified himself with the poor. The Bible says that Jesus came to preach the Gospel to the poor (Luke 4:18). The Bible also tells us that we should remember the poor (Gal 2:10).

The Christmas story epitomizes the spirit of giving (John 3:16). Let us search for ways to share our wealth with the less fortunate of the world. Jesus told, '…when you give a banquet, invite the poor, the crippled, the lame, the blind, and you will be blessed. Although they cannot repay you, you will be repaid at the resurrection of the righteous' (Luke 14: 12-14). The Bible promises blessing to those who consider the poor (Read Psalm 41: 1-3; 112:9).

**5. ANNOUNCE THE GOOD NEWS**

The angel of the Lord came to announce the message of “good news” during Christmas (Luke 2:10). The message of the angel was a message of Salvation. He came to proclaim the glorious news that a Saviour had been born Bethlehem! (2:11). This message is also a message of hope! This message came first to the shepherds who were neglected by the society and considered as social outcasts. This good news of salvation and hope is for ALL people (Luke 2:10). Understanding this importance of this message, the shepherds spread it far and wide (Luke 2:17). We are talking about preparing for the second coming of Jesus Christ. But thousands in our city are unaware of his first coming.

Have you spoken to at least one non- Christian this year about Christ? Decide to share the love of God with those who have never heard about the first Christmas! Ask God to lay on your heart one person who needs to hear the good news of Jesus this month. And ask him for an opportunity to show the love of God to that person. If you don't feel that you're able to tell them how to know Christ, then invite them to church on any Sunday. Make this Christmas season a time of evangelism!

---

**வருடக் கடைசி வீடு சந்திப்பு**

**Year End House Visiting**

**டிசம்பர் 3 திங்கள் முதல் டிசம்பர் 14 வெள்ளி வரை**

**December 3rd Monday to 14th Friday**

# THANKSGIVING

The following are the some of the truths the Bible reveals to us concerning the art of thanksgiving.

1. **Thanksgiving is a law of God to obey.** Giving thanks is not just something sweet to do. It is a precept to obey. “In everything give thanks, for this is God’s will for you in Christ Jesus.” (! Thess. 5:18)
2. **Giving up giving thanks can lead to idolatry.** “Though they knew God, they did not honor him as God, or give thanks... and exchanged the glory of the incorruptible God for an image” ((Rom 1:21-25). Does your heart overflow every day with thanks and praise? If not, your heart is preparing itself for idolatry.
3. **A prayer without thanksgiving is defective.** Prayer is not petition alone, but rather “Petitions and thanksgivings”. Paul urges us, “in everything by prayer and supplication with thanksgiving let your requests be made known to God” (1Tm 2:1 Phi 4:6). Effective prayer is not just asking for things. It’s also giving thanks for things. Prayer without thanksgiving is like a chair with one leg missing, or a clock with no hour hand.
4. **Thanksgiving is a life-pervading principle.** Thanksgiving is not only for special occasions. “Always giving thanks for all things” is the rule (Eph. 5:20). “Whatever you do in word or deed, do all in the name of the Lord Jesus, giving thanks through him to God the Father” (Col 3:15-17). Don’t wait for some special blessing before giving thanks. The breath you are taking right now is a blessing enough. Use it to give thanks to God. Thanksgiving applies to ordinary things.
5. **Thanksgiving counteracts bad language.** ‘Thanksgiving living’ is the secret of how to conquer the wayward tongue. “There must be no filthiness and silly talk, or coarse jesting, which are not appropriate, but rather giving of thanks” (Eph. 5:4). Get your lips into the habit of giving thanks, and you get them out of the habit of speaking evil.
6. **Thanksgiving is not to God alone.** Thanksgiving ought to be directed not only toward God but also to others. When Paul thanked Priscilla and Aquila, this was just as much an act of Christian thanksgiving as though they had thanked God. An expression of gratitude, to those who deserve it, makes God just as happy as a prayer of thanks to himself. It’s all thanksgiving, and God loves the ‘gratitude attitude’ when it is shown to others just as when it is shown to him (Rom 16:3-4)

7. **Gratitude prevents many problems in life.** One fact about thanksgiving is that the lack of it causes, and the presence of it prevents, many of life's problems. If we want "the peace of God" we have to "rejoice always" and the simplest help for that is to live and pray "with thanksgiving" (Phil. 4:6-7).

8. **Thanksgiving is a gift to God.** Thanksgiving is our gift to God. We do call it thanks GIVING after all. We "offer up a sacrifice of praise to God continually, that is, the fruit of lips that give thanks to his name" (Heb. 13:15-16).

## Seven Rules for Spiritual Growth

A person who is "born again" starts a new life similar to that of a new-born infant. Seven rules that promote good health in babies can be adapted and applied to a Christian's spiritual growth.

1. **Daily Food**. Take in the "pure milk of the word" through regular bible study (1 Pet. 2:2,3).
2. **Fresh Air.** Pray often or you will faint. Prayer is the oxygen of the soul (1 Thess. 5:17).
3. **Regular Exercise.** Put into practice what you learn in God's Word (James 1:22).
4. **Adequate Rest.** Rely on God at all times in simple faith (Mark 6:31).
5. **Clean Surroundings.** Avoid whatever will weaken you spiritually (Eph. 5:11).
6. **Loving Care.** Be part of a church where you will benefit from a pastor's teaching and Christian fellowship (Heb. 10:25).
7. **Periodic Check-ups.** Regularly examine your spiritual health (1 Cor. 11:31; Ps. 139: 23, 24).

## 50 நாட்கள் உபவாச ஜெபம்

### அக்டோபர் 13 – டிசம்பர் 1

**தினமும் காலை 10.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரையிலும்**
**மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும்**
**சபையில் ஜெபம் நடைபெறும். பங்குபெறுங்கள்.**

# FASTING

Fasting is an assumed practice in Scripture. It is mentioned in 59 contexts with the words appearing nearly 80 times. Further, fasting is a discipline that Jesus assumed His disciples would practice and about which He taught them (Matt. 6:16-18; 9:14-15). As a Jew, Jesus Himself practiced fasting (Matt. 4:1-2; Luke 4:1-2). The New Testament church also fasted as we see in Acts 13:1-3 and 24:13.

## PURPOSES OF FASTING

During the days of fasting, have a definite goal and purpose. Write down the goals and pray for it. In the scriptures, people fasted for several purposes

- To repent from personal sin and failure (1 Sam. 7:6; Neh.9:1-2)
- To mourn over the sins of the church, nations and the world (1 Sam. 7:6; Neh. 9:1-2)
- To seek grace for a new task (Matt. 4:2)
- To gain revelation, wisdom, and understanding concerning the will of God (Dan. 9:3, 21- 22,Acts 13: 2-3)
- To humble one's soul before God and to plead for revival and reformation among God's people (Ezra 8:21; Ps. 69:10)
- To show repentance and make a way for God to change his declared intentions of Judgment (II Sam. 12:16, 22; Joel 2:12-14; Jonah 3:5, 10)
- For the deliverance of people and for the salvation of souls (Isaiah 58:6; Luke 4:18)

## TYPES OF FASTING

There are three types of fasting illustrated in biblical examples. **The first** type is the "Normal Fast." The Normal Fast is defined as going without food but drinking fluids, such as water, various juices, etc. This type of fast could last for up to forty days. **The second** kind of fast is the "Complete Fast or Absolute Fast," during which neither food nor fluids are ingested. Obviously, this fast should last no more than a few days. Examples of this type of fast in the Scriptures can be found in Acts 9:9, Ezra 10:6 and Esther 4:16. **The third** type of fast is the "Partial Fast," which is a Normal Fast that is on occasion interrupted because of health restrictions or social obligations. A biblical example of this type of fast can be found in Daniel's life in Daniel 10:3. Though less demanding than a normal fast, the partial fast is a legitimate form of fasting and is to be respected, as illustrated by Daniel's action that resulted in great victory over the powers of Satan.

**நன்றி செலுத்தும் ஞாயிறு – *THANKSGIVING SUNDAY***

**நவம்பர் 25 - *November 25***

## ஆண்கள் ஐக்கியம் - Men's Fellowship



3வது
திங்கட்கிழமை
மாலை 7.00 மணி

திருச்சபையிலுள்ள
அனைத்து ஆண்களும்
பங்குபெறும்படி
அன்புடன் அழைக்கிறோம்.

---

## பெண்கள் எழுப்புதல் ஜெபம் - Women's Revival Prayer

**ஒவ்வொரு வியாழக்கிழமை**
**காலை 10.30 மணி முதல் 1.00 மணி வரை**

*பங்குபெறுங்கள்!* *ஆசீர்பெறுங்கள்*



---

## வாலிபர் ஐக்கியம் - Youth Fellowship

I & III **ஞாயிற்றுக்கிழமை**
**மாலை 4.30 மணி முதல்**
**6.00 மணி வரை**



திருச்சபையிலுள்ள
அனைத்து வாலிபர்களும்
பங்குபெறும்படி
அன்புடன் அழைக்கிறோம்.

---


# இசைப் பயிற்சி வகுப்புகள்

இடம் : **சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச்**
ஜென்னி பிளாசா, திருச்சி – 1.

Guitar, Keyboard,
Rhythm Pad
& Drums

**செவ்வாய் தோறும் மாலை 6.00 மணி முதல் 8.15 மணி வரை**

---



## BIBLE STUDY
## வேதப்பாடம்

**ஒவ்வொரு ஞாயிறு**
**மாலை 6.30 மணிக்கு**

**Every Sunday @ 6.30 p.m**

தலைப்பு : **வேதாகம கதாப்பாத்திரங்கள்**
Topic : **Bible Characters**

## GOALS FOR 2018

| | | |
|---|---|---|
| 100 | - | New Families |
| 100 | - | Baptism |
| 100 | - | Holy Spirit Baptism |
| 1 | - | New Village Church |
| 20 | - | New Leaders |
| 15 | - | New Prayer Cells |

## 2018 சபை இலக்குகள்

| | | |
|---|---|---|
| 100 | - | புதிய குடும்பங்கள் |
| 100 | - | ஞானஸ்நானம் |
| 100 | - | பரிசுத்த ஆவி அபிஷேகம் |
| 1 | - | புதிய கிராம சபை |
| 20 | - | புதிய தலைவர்கள் |
| 15 | - | புதிய ஜெபக்குழுக்கள் |

## Sunday Services - ஞாயிறு ஆராதனைகள்

| | | |
|---|---|---|
| I Tamil Service | 7.00 am - 8.45 am | முதல் தமிழ் ஆராதனை |
| English Service | 9.00 am - 10.45 am | ஆங்கில ஆராதனை |
| II Tamil Service | 11.00 am - 12.30 pm | 2-ம் தமிழ் ஆராதனை |
| Evening Service | 6.30 pm - 8.00 pm | மாலை ஆராதனை |
| Children Service | 7.30 am, 9.30 am | சிறுவர் ஆராதனை |
| Youth Meeting | 1st Sunday-11.00 am (Eng)<br>1st & 3rd Sunday-4.30 pm (Tamil) | வாலிபர் ஆராதனை |

## Weekly Meetings - வாராந்திர ஊழியங்கள்

| | | |
|---|---|---|
| Family Counselling | Tuesday - செவ்வாய்<br>10.30 am - 1.00 pm | குடும்ப ஆலோசனை |
| Women's Prayer | Thursday - வியாழன்<br>10.30 am - 1.00 pm | பெண்கள் ஜெபம் |
| Prayer Cells | Wed/Thu - புதன் / வியாழன்<br>7.00 pm - 8.00 pm | ஜெபக்குழுக்கள் |
| Intercessory Night Prayer | Ist Friday - வெள்ளி<br>7.00 pm - 10.00 pm | மன்றாட்டு இரவு ஜெபம் |
| Chain Prayer | IVth Friday - வெள்ளி<br>6.00 a.m - 6.00 a.m | சங்கிலி ஜெபம் |
| Early Morning Communion Service | 1st Day of the Month,<br>மாதத்தின் முதல் நாள்<br>5.00 a.m - 6.30 a.m | அதிகாலை திருவிருந்து ஆராதனை |

Magazine Subscription
Bi -Monthly : Rs.20/-
Yearly : Rs.100/-
Postage : Rs.25/- Extra

Send Your prayer requests
@
www.cityrevivalagchurch.org

# City Revival A.G. Church

*Warmly Welcomes you to the*

## PRAISE & WORSHIP SERVICES

**EVERY SUNDAY**

Tamil Service - 7.00 a.m,
11.00 a.m
English Service - 9.00 a.m
Evening Service - 6.30 p.m

**ஞாயிறு தோறும்**

தமிழ் ஆராதனை 7.00 மணி,
11.00 மணி
ஆங்கில ஆராதனை 9.00 மணி
மாலை ஆராதனை 6.30 மணி

Venue : A/c Hall, 1st Floor, JENNE PLAZA,
No.5, Bharathiyar Salai, (Near Head Post Office),
Cantonment, Trichy - 1.

Anointed and Lively Worship, Soul-stirring Music
& Practical, Life-changing Messages

*Come with your friends & family &*
*Receive the blessings of God*



Sunday School is conducted for
kids below 14 years





**Rev. Dr. JERRY DANIEL**
Cell : 94434 15484, 98423 15484
www.facebook.com/jerrydanieltrichy
jerrydanieltrichy@gmail.com
www.cityrevivalagchurch.org